வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | வணிகக்கல்வி I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :....................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) வணிக வகைப்படுத்தலின் அடிப்படைகள் சில X நிரலிலும் அவை வகைப்படுத்துகின்ற முறைகள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| i) உற்பத்தித்தன்மை | A – விவசாயம், கைத்தொழில் சேவை |
| ii) உற்பத்தித்துறை | B – சிறிய நடுத்தர பரிய அளவு |
| iii) உரிமை | C – முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை |
| iv) நோக்கம் | D – இலாப நோக்கம், இலாப நோக்கன்று |
| v) பருமன் | E – தனியார்துறை, பொதுத்துறை |

X நிரலில் தரப்பட்டுள்ள வணிக வகைப்படுத்தலின் அடிப்படைக்கும் Y நிரலிலுள்ள முறைகளுக்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

1) A, B, C, D E　　2) A, C, E, D, B　　3) C, A, D, E, B
4) C, A, E, D, B　　5) B, A, E, C, D　　(……..…..)

02) பல்வேறு தரப்பினரும் வணிகம் தொடர்பில் அக்கறை காட்டுவதற்கு ஏதுவான காரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – இலாபம்　　B – வணிகத்தின் விருத்தி
C – சந்தைப்பங்கு　　D – எடுத்த தீர்மானங்களின் வெற்றி
E – உயர் சம்பளம்　　F – பதவி உயர்வு

மேலுள்ளவற்றுள் வணிகம் தொடர்பில் முகாமையாளர்கள் மட்டும் அக்கறை காட்டுவதற்கான காரணங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, B, D   2) A, C, D   3) A, B, E   4) A, D, F   5) D, E, F   (………..)

03) பேரினச்சூழல் காரணிகள் சில X நிரலிலும் அவற்றுடன் தொடர்புடைய உதாரணங்கள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| i) பொருளாதாரச் சூழல் | A – இணையவலையமைப்பினூடாக வழங்கப்படுகின்ற சேவைகள் பாரியளவில் விருத்தியடைதல். |
| ii) மக்கட்சூழல் | B – உலகிலுள்ள நாடுகள் பொதுவாக நிலைபேறான அபிவிருத்தியில் ஈடுபடல். |
| iii) தொழில் நுட்பச்சூழல் | C – 60 வயதுக்கு மேற்பட்டோரின் சனத்தொகை வீதமானது மிகக்கூடிய மட்டத்தில் காணப்படல். |
| iv) சமூக, கலாசாரச்சூழல் | D – நுகர்வுப்பொருட்களுக்கான விலைமட்டங்களை அதிகரித்தல். |
| v) பூகோளச்சூழல் | E – தமிழ் மக்கள் தைப்பொங்கள் திருநாளை சிறப்பாகக் கொண்டாடுவதில் ஆர்வம் காட்டுதல். |

Y நிரலில் தரப்பட்டுள்ள பேரினச்சூழல் காரணிகளின் வரிசைப்படி Y நிரலிலுள்ள உதாரணங்களை சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) A, C, D, E, B   2) B, C, A, E, D   3) D, C, A, B, E

4) D, C, A, E, B   5) D, C, B, E, A   (………..)

agaram.lk

04) பின்வருவனவற்றுள் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புபடாத நிறுவகத்தை தெரிவு செய்க.

1) மத்திய சூழல் அதிகாரசபை
2) உள்நாட்டு இறைவரித்திணைக்களம்
3) இலங்கை தரக்கட்டளைகள் பணியகம்
4) அளவை நிறுவை தர நியமச்சேவைத் திணைக்களம்
5) தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு   (………..)

05) பின்வருவனவற்றுள் வரையறுத்த பொதுக்கம்பனி (PLC) ஒன்றின் குணாம்சங்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

1) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாததும் பங்குப்பரிமாற்றத்தில் பட்டியலிடப்படுவதும்
2) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதும் பங்குபரிமாற்றத்தில் பட்டியலிடப்படாததும்
3) ஆகக்குறைந்த பங்குத்தாரர் ஒன்று என்பதுடன் ஆகக்கூடியது ஐம்பது.
4) ஆகக்குறைந்த பணிப்பாளர்கள் எண்ணிக்கை ஒன்று என்பதுடன் ஆகக்கூடியது வரையறையற்றது.
5) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதும் பங்குப்பரிமாற்றத்தில் பதிவு செய்யப்பட்டதும்.

(………..)

06) பின்வருவனவற்றுள் எது ஒரு தனியார்துறை வணிகம் அன்ற?
1) மார்ட்டின் பெரேராவும் புதல்வர்களும்
2) தரங்கி பிரசுரிப்பாளர்கள்
3) வரையறுத்த விஸ்கம் உற்பத்திக்கம்பனி
4) இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்
5) வரையறுத்த மொனறா கலை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் (……….)

07) “சட்ட ஆளுமையுடைய” வணிகம் என்பதன் பொருள்
1) சொந்தக்காரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது என்பதாகும்.
2) வணிகத்தின் நடவடிக்கைகள் சொந்தக்காரரின் பெயரில் நடத்தப்பட முடியும் என்பதாகும்.
3) அந்த வணிகத்தின் பெயராலே வணிகத்தின் நடவடிக்கைகள் நடத்தப்பட முடியும் என்பதாகும்.
4) ஒரு குறித்த சட்டத்தின் கீழ் வணிகத்தை பதிவு செய்வதென்பதாகும்.
5) தொடர்ந்து இயங்கக்கூடிய நன்மையாகும். (……….)

08) வணிக முறைமையில் ஏதாவது பொருள் உற்பத்தியொன்றில் பல்வேறு உற்பத்திச் சங்கிலியுடன் தொடர்புடைய வணிக நிறுவனங்கள் ஒன்றாக இணைவது.
1) கிடை இணைப்பு
2) நிலைக்குத்து இணைப்பு
3) முரண்பாடான இணைப்பு
4) வியாபார விரிவாக்க இணப்பு
5) உற்பத்தி விரிவாக்க இணைப்பு (……….)

09) அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் குணாம்சம் அல்லாதது எது?
1) விசேட அல்லது பொதுச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படல்
2) சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்துக் காணப்படல்
3) முழுமையான உரிமை அல்லது அதிக உரிமை அரசிற்கே உரித்துடையது.
4) அரசினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படும்.
5) அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தேவையான நிதியத்தை ஈட்டிக்கொள்ளல். (……….)

10) வெற்றிகரமான முயற்சியாண்மையினூடாகக் கிடைக்கும் அனுகூலங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A – மனத்திருப்தி கிடைக்கப் பெறல்
B – வருமான சந்தர்ப்பங்கள் உருவாதல்
C – சந்தைப் பாங்கு விரிவடைதல்
D – மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்
E – புத்தாக்க உற்பத்திகளையும் சேவைகளையும் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.
மேலேயுள்ளவற்றுள் சமூக பொருளாதாரத்துக்குக் கிடைக்கக்கூடிய மூன்று நேரடி அனுகூலங்களாவன
1) B, C, D ஆகியன
2) A, B, D ஆகியன
3) B, D, E ஆகியன
4) C, D, E ஆகியன
5) A, D, E ஆகியன
(……….)

agaram.lk

11) இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரவு அளவு வணிகங்களுக்கு "சஹன்யா" கடன் திட்டத்துக்கு ஆதரவளிக்கும் நிறுவனத்தைத் தெரிவு செய்க.

1) தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்
2) ஆசிய அபிவிருத்தி வங்கி
3) உலக வங்கி
4) சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி
5) இலங்கை மத்தியவங்கி (……….)

12) சுமெதா, கணேசன், ரிசானா, மைக்கல் ஆகியோர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – சுமேதா மிகவும் உறுதியற்ற ஒரு சந்தையில் தனது வியாபாரத்தை மேம்படுத்தி நடத்துகின்றார்.

B – கணேசன் தனது போட்டியாளர்களை எதிர் கொள்வதற்குச் சந்தையில் ஒரு புதிய பொருளை அறிமுகஞ் செய்தார்.

C – ரிசானா தனது தந்தை ஆரம்பித்த வியாபாரத்தை அவ்வாறே இலாபங்களைப் பெற்றுக் கொண்டு நடத்திச் செல்கின்றார்.

D – மைக்கல் நட்டங்கள் இருந்த போதிலும் வியாபாரத்தை மேற்கொள்ளும் ஒரு வியாபாரத்தின் உரிமையாளர் ஆவார்.

மேற்குறித்த கூற்றுக்களுக்கேற்ப உயர்மட்ட முயற்சியாண்மைச் சிறப்பியல்புகளைக் காட்டுபவர்கள்.

1) சுமேதாவும் கணேசனும் 2) சுமேதாவும் மைக்கலும் 3) கணேசனும் ரிசானாவும்
4) சுமேதாவும் ரிசானாவும் 5) கணேசனும் மைக்கலும் (……….)

13) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் தோல்விக்கான சில காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – உயர்வான போட்டி
B – கணக்குகள் சரியாகப் பேணப்படுவதில்லை
C – உட்கட்டமைப்பு வசதிகள் போதாத தன்மை
D – முகாமைத்துவத்தின் பலவீனம்
E – அரசாங்க வரிச்சலுகைகள் குறைவடைதல்
F – முயற்சியாண்மைத்திறன் குறைவாகக் காணப்படல்.
G – கைத்தொழிலில் மாற்றமடைகின்ற உற்பத்தித் தொழில்நுட்பம்.

மேலே தரப்பட்டவற்றுள் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகரால் கட்டுப்படுத்த முடியாத காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடை எது?

1) C, D, E, F 2) A, C, D, F 3) A, C, E, G 4) D, E, F, G 5) A, E, F, G (……….)

14) "பணம்" என்பதற்கான மிகச் சிறந்த கருத்தைதரும் கூற்றைத் தெரிவு செய்க.

1) பரிமாற்று ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் ஒரு பொருள்
2) பெறுமானத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் ஒரு பொருள்.
3) பெறுமானத்தின் திரட்டாக பயன்படுத்துகின்ற ஏதேனும் ஒரு பொருள்
4) பரிமாற்றத்தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஒரு பொருள்.
5) பிற்போட்ட கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் ஒரு பொருள் (……….)

agaram.lk

15) பின்வருவன வங்கிளால் வழங்கப்படும் சில சேவைகள் ஆகும். இவற்றுள் நடைமுறைக் கணக்கைப் பேணும் வாடிக்கையாளருக்கு மட்டும் வழங்கப்படும் சேவை.

1) நிலையான கட்டளைகளைச் செயற்படுத்துதல்
2) வங்கி மேலதிகப்பற்று வசதிகளை வழங்குதல்
3) நிலையான வைப்புக்களை பேணுதல்
4) இலத்திரனியல் காசு தொடர்பிலான சேவைகளை வழங்குதல்
5) காசோலைகளை வைப்புச் செய்யக்கூடியதாக இருத்தல் (………)

16) ஆயுள்காப்புறுதி உட்பட சகல காப்புறுதிகளுக்கும் பிரயோகிக்கப்படத்தக்க காப்புறுதித் தத்துவங்களைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1) உச்ச நம்பிக்கை / காப்புறுதி செய்யும் உரிமை / அண்மிய காரணிகள் தத்துவம்
2) உச்ச நம்பிக்கை / காப்புறுதி செய்யும் உரிமை / இழப்பீட்டுத் தத்துவம்
3) உச்ச நம்பிக்கை / பங்களிப்புத்தத்துவம் / காப்புறுதி செய்யும் உரிமை
4) காப்புறுதி செய்யும் உரிமை / பதிலாள் வைப்பு / அண்மிய காரணிகள் தத்துவம்
5) உச்ச நம்பிக்கை / காப்புறுதி செய்யும் உரிமை / பதிலாள் வைப்பு (………)

17) தொடர்பாடல் செயல் முறையின் பின்னூட்டலின் முக்கியத்துவம்

1) பெறுபவருக்கு செய்தியைப் பிழையில்லாமல் கொடுத்தல்
2) பெறுநரின் கவனத்தை ஈர்த்தல்
3) பெறுநர் செய்தியை சரியாகப் பெற்றாரா என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.
4) பெறுநருக்கு மீண்டும் செய்தியை அனுப்புதல்
5) பெறுநரின் துலங்களை அறிந்து கொள்ளல். (………)

agaram.lk

18) அரசாங்கத்திற்கும் குடிமகனுக்கும் இடையே இருக்கும் ஒரு இலத்திரனியல் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் (Electronic Commerce Transaction) இற்குப் பெருத்தமான காரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1) பயணச்சீட்டு முகவர் ஒருவர் சாமந்தி என்பவருக்கு விமானப் பயணச்சீட்டுக்களை விற்பனை செய்தல்.
2) பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தல்.
3) கடன் அட்டையொன்றைப் பயன்படுத்தி வருமான வரியைச் செலுத்துதல்.
4) ஊழியர் சேமலாபநிதியினைச் செலுத்துதல்
5) வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுமுறை (Slips) (………)

19) கீழே தரப்பட்டவற்றுள் களஞ்சியப்படுத்தல் செயல்முறைக்குப் பொருத்தமற்ற தொழிற்பாட்டைத் தெரிவு செய்க.

1) இருப்புக்கள் கிடைக்கப்பெறல்
2) சரியானது என உறுதிப்படுத்திக் கொள்ளுதல்
3) இருப்புக்களை பரீட்சித்தல்
4) திரும்பி வரும் இருப்புக்களை பெற்றுக் கொள்ளல்
5) வழங்குவதற்காக மீளப்பெற்றுக் கொள்ளல்

(………)

20) பின்வருவனவற்றுள் "பயனுறுதி" (Effectiveness) என்ற பதத்திற்கு சரியான கருத்தைத்தரும் கூற்றைத் தெரிவு செய்க.

1) நிறுவனமொன்று குறைந்தளவிலான உள்ளீட்டில் இருந்து கூடிய அளவிலான வெளியீட்டைப் பெறுதல்
2) நிறுவனமொன்று எந்தளவிற்கு உத்தேச நோக்கத்தைச் சரியாக அடையும் என்பதாகும்.
3) உள்ளீட்டுக்கும், வெளியீட்டுக்கும் ஒப்பிடக்கூடிய தொடர்பு
4) செய்ய வேண்டிய கருமங்களைச் சரியாகச்செயதல்
5) வளங்களின் விரயத்தைப் பூச்சிய மட்டத்துக்குக் கொண்டு வருதல் (……..)

21) பின்வரும் அட்டவணையில் X நிரலில் முகாமைத்துவ மட்டங்களும் Y நிரலில் முகாமைத்துவப் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – உயர்மட்ட முகாமையாளர் | 1) மேற்பார்வையாளர்<br>2) நிதி முகாமையாளர் |
| B – நடுத்தரமட்ட முகாமையாளர் | 3) மனிதவள முகாமையாளர்<br>4) முகாரி (Foreman) |
| C – முன்வரிசை முகாமையாளர் | 5) பிரதான நிறைவேற்று அதிகாரி<br>6) பொது முகாமையாளர் |

முகாமைத்துவமட்டங்களையும் அவற்றிற்குரிய முகாமைத்துவ பதவிப் பெயர்களையும் சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) A – 1, 4 B – 2, 3 C – 5, 6
2) A – 5, 6 B – 2, 3 C – 1, 4
3) A – 4, 6 B – 2, 5 C – 1, 3
4) A – 5 , 6 B – 3, 4 C – 1, 2
5) A – 3, 5 B – 2, 6 C – 1, 4 (……..)

22) திட்டமிடல் ஒழுங்கமைத்தல் தொடர்பான பணிகள் சில தரப்படுகின்றன.

A – இலக்குகளையும் உபாய வழிமுறைகளையும் அறிந்து கொள்ளல்.
B – ஆளிடைப் பகுப்பாய்வு
C – செயற்பாடுகளை இணங்கானல்
D – தந்திரோபாயத் தீர்மானங்களை எடுத்தல்
E – அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் ஒப்படைத்தல்
F – உபாய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.
G – வெற்றியினை அளவிடலும் கட்டுப்படுத்தலும்
H – வளங்களைப் பகிர்ந்தளித்தல்

மேற்கூறிய பணிகளில் திட்டமிடலின் பணிகளை மட்டும் உள்ளடக்கிய சரியான விடையாக அமைவது?

1) A, B, C, D, I மட்டும்
2) A, B, E, F, H மட்டும்
3) A, B, D, G, H மட்டும்
4) A, B, D, E, I மட்டும்
5) A, B, E, G, H மட்டும்

(……..)

agaram.lk

23) A – சந்தைப்படுத்தல்

B – உற்பத்தித் திட்டமிடல்

C – பொருள் கொள்வனவு

D – ஊழியரிடல்

E – உற்பத்திக்கட்டுப்பாடு

F – களஞ்சியப்படுத்தல்

G – தரக்கட்டுப்பாடு

மேலே தரப்பட்டுள்ளவற்றில் செயற்பாட்டு முகாமைத்துவத்துக்குரிய கருமங்களை சரியாகக் கொண்ட தொகுதி எது?

1) A, B, C, F 2) B, C, E, G 3) B, C, D, E 4) B, C, E, F 5) D, E, F, G (………)

24) பின்வரும் அட்டவணை உற்பத்திப் பொருளையும் பொருத்தமான தள அமைப்புத்திட்டத்தையும் எடுத்துக்காட்டகின்றது.

| உற்பத்திப்பொருள் | தள அமைப்பு |
|---|---|
| I) மோட்டார் வாகனம் | A – நிலையான இடத்தள அமைப்பு |
| II) தளபாடம் | B – செயன்முறைத்தள அமைப்பு |
| III) கட்டட நிர்மானம் | C – பொருள் உற்பத்தித்தள அமைப்பு |

ஒவ்வொரு உற்பத்திப்பொருளுக்கும் பொருத்தமான தள அமைப்பைத்தருகின்ற தொகுதியைத் தெரிவு செய்க.

1) I – A, II – B, III – C 2) I – B, II – A, III – C 3) I – C, II – A, III – B

4) 1 – C, 11 – B, III – A 5) I – C, II – A, III – B

(………)

25) சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் X நிரலிலும் அதற்குப்பொருந்தக்கூடிய பிரதான வெளிப்படுத்தல்கள் கூறுகள். Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| i) உற்பத்தி எண்ணக்கரு | A – போட்டி விற்பனைக் கொள்கை மற்றும் மேம்பாட்டு முறைகள். |
| ii) உற்பத்திப் பொருள் எண்ணக்கரு | B – தரம் தொடர்பில் கவனம் செலுத்துதல். |
| iii) விற்பனை எண்ணக்கரு | C – உற்பத்தியாளர் விருப்பும் குறைந்த கிரயமும் |
| iv) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு | D – நுகர்வோரது தேவைகள் விருப்பங்கள் |
| v) முழுப்படைப்பு எண்ணக்கரு | E – சந்தைப்படுத்தலில் சகல கூறுகளும் ஒரே நெருக்கத்துடன் செயற்படல். |

X நிரலில் குறிக்கப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களுக்கமைய Y நிரலில் குறிப்பிட்டுள்ள கூறுகளை சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) C, B, A, D, E 2) C, D, A, B, E 3) B, C, A, D, E

4) D, C, B, A, E 5) C, D, E, A, B (………)

agaram.lk

26) பல்வேறு சின்ன வகைகள் X நிரலிலும் அவற்றுடன் தொடர்புடைய உதாரணங்கள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – தனிப்பட்ட சின்னம்<br>B – குடும்பச்சின்னம்<br>C – தேசிய சின்னம<br>D – பொருள் சின்னம் | 1. சிங்கர்<br>2. ஹரிச்சந்திர<br>3. சன்லைட்<br>4. நிபுன அரிசி<br>5. சிக்னல்<br>6. MD உற்பத்திகள்<br>7. விஜய மிளகாய்தூள்<br>8. Cocacola |

சின்ன வகைகளையும், அவற்றிற்குரிய உதாரணங்களையும் சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) A – 1, 7 B – 2, 6 C – 4, 8 D – 3, 5
2) A – 4, 7 B – 1, 2 C – 6, 8 D – 3, 5
3) A – 4, 7 B – 2, 6 C – 1, 8 D – 2, 6
4) A – 3, 5 B – 4, 7 C – 1, 8 D – 2, 6
5) A – 2, 7 B – 3, 5 C – 1, 8 D – 4, 6 (……….)

27) வணிகமொன்றின் நிதியீட்டல் வழி முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – மேலதிகப்பற்று
B – நிறுத்தி வைத்த இலாபம்
C – குத்தகைக்கு எடுத்தல்
D – வர்த்தகப் பத்திரங்கள்
E – பங்கு வழங்கல்

மேலே தரப்பட்ட நிதியீட்டல் வழி முறைகளுள் நேர் நிதியீட்டல் வழிமுறைகளாவன

1) A யும் C யும் 2) B யும் C யும் 3) B யும் D யும்
4) B யும் E யும் 5) C யும் D யும் (……….)

28) பணத்தை ஓர் ஆண்டிலும் குறைவான ஒரு காலப்பகுதிக்குள் பயனுறுதி வாய்ந்த வகையில் முதலீடு செய்வதற்குப் பொருத்தமான நிதிக் கருவியைத் தெரிவு செய்க.

1) கம்பனிப்பங்குகள் 2) நிறைசேரி உண்டியல்கள் 3) திறைசேரி முறிகள்
4) கம்பனித் தொகுதிக்கடன் 5) அலகுப்பொறுப்பு நிதியங்கள் (……….)

29) வணிக நிறுவனமொன்றின் நிதி முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கம்

1) நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் வகைகளை அதிகரித்தல் ஆகும்.
2) நிறுவனத்தினால் செலுத்தப்படுகின்ற வரியினளவை குறைத்தல் ஆகும்.
3) ஊழியர்களால் உழைக்கப்படும் வெகுமதிகளை உச்சப்படுத்தல் ஆகும்.
4) வணிக உரிமையாளர்களின் வணிகத்தோடு இணைந்த பெறுமானத்தை (செல்வத்தை) உச்சப்படுத்தல்.
5) வாடிக்கையாளர்களின் திருப்தியை உச்சப்படுத்தல் ஆகும். (……….)

agaram.lk

30) வேலைப்பகுப்பாய்வின் போது கவனம் செலுத்தப்படுகின்ற விடயங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – கல்வித்தகைமைகள்

B – சேவைக்காலம்

C – தொழிற் தகைமைகள்

D – கருமங்கள், கடமைகள் பொறுப்புக்கள்

E – பயிற்சியும் அனுபவமும்

F – மேற்பார்வையும் மதிப்பீட்டு நடைமுறையும்

G – சேவைத்திணைக்களம்

H – பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரி

மேலேதரப்பட்ட விடயங்களுள் வேலை விபரணத்துள் காட்டப்படுகின்ற விடயங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

1) A, B, C, D, H 2) A, D, E, F, H 3) B, C, E, F, G

4) B, D, E, F, G 5) B, D, F, G, H (……..…)

❖ **31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

31) அ) சுயதேவை உற்பத்தி முறை தனிப்பட்டவர்களின் …………………………………………… ஐயும் மேலதிக உற்பத்திப் பொருட்களின் பரிமாற்றம் ……………………………………... …………………………… ஐயும் உருவாக்குகின்றது.

ஆ) ஊழியர்கள் வேறு திறன்கள் மற்றும் சிறந்த மனப்பாங்கு கொண்டிருத்தல் நிறுவனத்துக்கு ஒரு ……………………………………………………… காணப்படுவதுடன் அதன் பொருத்தமற்ற தன்மை நிறுவனத்துக்கு ஒரு ……………………………………………….. ஆகவும் காணப்படுகின்றது.

32) அ) வணிகமொன்றின் இலாபத்தன்மையை உயர்த்துவதற்கு …………………………………… அக்கறை உடையவராகக் காணப்படுகின்ற அதேவேளை வணிகத்தின் நீண்ட கால வாழ் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு …………………………..........…………. அக்கறை உடையவர்களாகக் காணப்படுவர்.

ஆ) உடைமையாளர் ஒருவர் வணிகமுகாமைத்துவம் தொடர்பில் பட்ட மேற்படிப்பைப் பூர்த்தி செய்வதானது அவரது வணிகத்திற்கு ஒரு ……………........................................................... காணப்படுவதுடன், சந்தையில் பதிலீட்டுப் பொருட்கள் தோற்றம் பெறல் நிறுவனத்துக்கு ஒரு ……………………………………………. ஆகவும் காணப்படுகின்றது.

33) அ) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களுக்கான சிறந்த சாதனையாளர் விருதுகளை வழங்கும் நிறுவனம் ………………………………………….. என அழைக்கப்படுவதுடன் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நிறுவனம் ………………………………………….. என அழைக்கப்படும்.

ஆ) இலங்கையில் காணப்படும் உற்பத்திப்பொருள் அங்கீகார வணிகங்களுக்கான இரண்டு உதாரணங்கள் ………………………………… உம் ………………………………… உம் ஆகும்.

34) தனியார் துறைகளுக்குரிய வணிக அமைப்புக்களின் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. மேற்காட்டிய ஒவ்வொரு நிறுவனத்திற்குரிய வணிக அமைப்பு வகைகளின் பெயர்களை அவற்றுக்கு எதிரேயுள்ள இடைவெளியில் எழுதுக.

A – வரையறுக்கப்பட்ட பிரியாகம்பனி ……………………………………………………..

B – ஆனந்தாஸ்ரோஸ் ……………………………………………………………………..

C – இலங்கை மின்சாரசபை ……………………………………………………………...

D – சில்வாவும் சகோதரர்களும் ……………………………………………………………

35) அ) வணிகவங்கிகள் வழங்குகின்ற பிரதான சேவைகள் இரண்டாக ……………………………..., ………………………………………………… என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஆ) தற்போது உலகளாவிய ரீதியில் மிகவும் பிரசித்தி பெற்ற இரு வகைக்கடன் அட்டைகளாவன ……………………………………… யும் ………………………………... ……………………………….. யும் ஆகும்.

36) உற்பத்தி செயன்முறைகள் பூர்த்தியாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து உற்பத்திப் பொருட்களை இறுதி நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்தல். வரையிலான அமையவியல் (Logistics) சேவை முறையின் அசைவினைக்காட்டும் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப்படத்திலுள்ள இடைவெளிகளுக்குபொருத்தமான சொற்களை இட்டு பூரணப்படுத்துக.

A – வழங்குனர் - B ……………………………… - C ………………………………………... ……………………………… - D ……………………………… - E ………………………………

37) இறக்குமதி நாட்டின் தேவைக்கேற்ப ஒரு நாடு ஏற்றுமதி செய்கின்ற சில விவசாயி உற்பத்திப் பொருட்களின் பாவனைப் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்தி வழங்கும் சான்றிதழ் ……………………………………………………………………………... எனப்படுவதுடன் இலங்கையில் அதனை ……………………………………………………………… நிறுவனம் வழங்குகின்றது.

38) அ) முகாமைத்துவம் என்பது இயங்கும் வணிகச் ……………………………………………… நிறுவனத்தின் குறித்த நோக்கங்களையும் குறிக்கோள்களையும் பயனுறுதியாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நிறுவனம் சார் ………………………….. பயன்படுத்துதல் ஆகும்.

ஆ) பரிமாற்றத்திற்கு தொடர்படுவதற்குள்ள விருப்பமும் கொள்வனவுச் சக்தியும் கொண்ட உண்மையானதும் சாத்தியப்பாடுடையதுமான வாடிக்கையாளர் அனைவரினதும் தொகுதி ……………………………………………………… எனப்படும். ஒரு பிரிவினரினால் மற்றோர் பிரிவினருக்காக முன்வைக்கக்கூடிய ஒரு செயற்பாடுகள் ……………………………………………… எனப்படும்.

agaram.lk

39) விற்பனையாளரொருவர் விற்பனைக்காக முன்வைக்கப்படும் உற்பத்தித்தொகுதி ……………… ………………………………………….. என அழைக்கப்படுவதுடன், அவை யாதேனும் 1) …………………………………………………… 2) …………………………………………… 3) ……………………………………………... என்பவற்றின் உள்ளடக்கத்தையும் கொண்டதாக இருக்கும்.

40) அ) வணிக நிறுவனமொன்று தனது இலக்குச் சந்தையில் சந்தைப்படுத்தல் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருவிகளின் கூட்டு …………… ……………………… எனப்படும்.

ஆ) சேவைச்சந்தைப்படுத்தலுக்கு தேவையான மூன்று மாறிகளான மனிதர்கள் (People) ………………………………………. மற்றும் ……………………………………………… என்பன ஆகும்.

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்புக்கள் நான்கு தருக.

1) ………………………………………………………………………………………...
2) ………………………………………………………………………………………...
3) ………………………………………………………………………………………...
4) ………………………………………………………………………………………...

42) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும், பொதுவாக சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் பல வளர்ச்சியடைந்த வண்ணம் உள்ளது. இந்நிலைமைக்கான நான்கு காரணங்கள் தருக.

1) ………………………………………………………………………………………...
2) ………………………………………………………………………………………...
3) ………………………………………………………………………………………...
4) ………………………………………………………………………………………...

43) வணிகங்கள் ஒழுக்க விழுமிய முறையொன்றைக் கட்டியெழுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு விடயங்கள் தருக.

1) ………………………………………………………………………………………...
2) ………………………………………………………………………………………...
3) ………………………………………………………………………………………...
4) ………………………………………………………………………………………...

44) நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நுகர்வோரொருவர் நிறைவேற்ற வேண்டிய நான்கு பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

1) ………………………………………………………………………………………...
2) ………………………………………………………………………………………...
3) ………………………………………………………………………………………...
4) ………………………………………………………………………………………...

agaram.lk

45) பொருளாதாரத்தில் பண நிரம்பலைக்கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் நான்கு முறைகளைத் தருக.

1) ..................................................................................................................

2) ..................................................................................................................

3) ..................................................................................................................

4) ..................................................................................................................

46) முயற்சியாண்மை மூலதனக் கம்பனியால் வணிகங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுவதன் நான்கு நோக்கங்களைக் குறிப்பிடுக.

1) ..................................................................................................................

2) ..................................................................................................................

3) ..................................................................................................................

4) ..................................................................................................................

47) கடன் அட்டைக் கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொள்வதற்கு கிடைக்கக்கூடிய நான்கு வசதிகளை எழுதுக.

1) ..................................................................................................................

2) ..................................................................................................................

3) ..................................................................................................................

4) ..................................................................................................................

48) கப்பல் தண்டக்காப்புறுதியின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகள் நான்கு தருக.

1) ..................................................................................................................

2) ..................................................................................................................

3) ..................................................................................................................

4) ..................................................................................................................

49) உயர்மட்ட முகாமையாளர்களின் கருமங்கள் நான்கு தருக.

1) ..................................................................................................................

2) ..................................................................................................................

3) ..................................................................................................................

4) ..................................................................................................................

50) கொழும்புபங்கு பரிமாற்றத்தில் கொடுக்கல் வாங்கல்கல் செய்யப்படுகின்ற நிதிக்கருவிகள் நான்கைப் பெயரிடுக.

1) ..................................................................................................................

2) ..................................................................................................................

3) ..................................................................................................................

4) ..................................................................................................................

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | வணிகக்கல்வி - II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

*01.*

1) அ) தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் (Wants) இடையிலான தொடர்பையும் அவற்றுக்கிடையிலான வேறுபாட்டையும் தெளிவுபடுத்துக.

ஆ) வணிகம் ஒன்றின் பண்புகள் நான்கை பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

2) இலங்கையின் பண்டைய பொருளாதாரச் செயன்முறையில் விவசாயம் அடிப்படையாக காணப்பட்ட போதிலும் நிகழ் காலத்தில் விவசாயத்துக்கு மேலதிகமாக பல்வேறு துறைகளை நோக்கி நகர்ந்துள்ளதைக் காணமுடிகின்றது.

அ) தற்பொழுது காணப்படும் இத்தகைய போக்கிற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) கைத்தொழிற் புரட்சியின் விளைவாக வணிகத்துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

3) அ) வணிகமொன்றின் அண்மிய சூழல் காரணிகளில் ஒன்றாக வாடிக்கையாளர்களைக் குறிப்பிட முடியும். ஏனைய நான்கு காரணிகளும் எவை?

அ) "கடந்த சில தசாப்தங்களாகவே பேரினச்சூழல் காரணிகளுள் தொழில்நுட்பச் சூழல் வணிக நிறுவனங்கள் மீது பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது" விளக்குக.

(04 புள்ளிகள்)

4) தற்காலத்தில் வணிகச் செயற்பாடுகளில் பொருளாதார அபிவிருத்தியைக் காட்டிலும் நிலை பேறான (Sustainable) பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியத்துவம் செலுத்தும் போக்கு காணப்படுகின்றது.

அ) வணிகமொன்று நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியின் சார்பாக கரும மாற்றும் போது கவனம் செலுத்த வேண்டிய நான்கு விடயங்கள் தருக.

ஆ) நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு வணிகமொன்றினால் எடுக்கக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

5) வணிக நிறுவனமொன்று தனது வாடிக்கையாளர்களை ஒழுக்க முறையாகக் கையாள்வதற்கு கவனம் செலுத்த வேண்டிய நான்கு காரணிகளைத் தருக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02.

1) அ) அரசின் வருமானம், செலவுகள் என்பவற்றின் கட்டமைப்பினை வரைபுகள் மூலம் குறிப்பிட்டுக் காட்டுக.

ஆ) நிதிக் கொள்கையினை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு பின்பற்றும் பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் கருவிகள் எவ்வாறு முக்கியத்துவமானதாய் அமையும் என்பதை விளக்குக.

1) திறந்த சந்தை நடவடிக்கைகள்

2) கழிவு வீதங்களை மாற்றுதல்

(04 புள்ளிகள்)

2) ''எக்ஸலன்ட்'' நிறுவனத்திற்குச் சென்ற ரமணி என்பவர் அங்கு ஊழியரொருவரினால் தரத்தில் மிக உயர்ந்த வகை என அறிமுகப்படுத்தப்பட்ட மின்சாரக் கொதிகலன் (கேத்தல்) ஒன்றைக் கொள்வனவு செய்தார். அதற்கு வழங்கப்பட்ட உத்தரவாதக் காலப்பகுதியினுள் அதில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக அது செயற்படாது பழுதடைந்தது. இது தொடர்பில் ரமணி எக்ஸலன்ட் நிறுவனத்திற்கு அறிவித்த போதும் நியாயமான தீர்வொன்று அவருக்குக்கிடைக்க வில்லை.

அ) இது தொடர்பில் நியாயமான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ரமணி அறிவிக்க வேண்டிய நிறுவனம் எது.

ஆ) மேலே தரப்பட்ட சம்பவத்தில் எக்ஸலன்ட் நிறுவனத்தினால் மீளப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் இரண்டைக் குறிப்பிட்டு, நுகர்வோரின் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

agaram.lk

3) அ) 1890ம் ஆண்டு பங்குடைமைகட்டளைச் சட்டத்துக்கு அமைவாக ''பங்குடைமை வணிகம்'' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

ஆ) மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்திற்கமைய பங்குடைமை வணிகமொன்று கொண்டிருக்கவேண்டிய பண்புகள் யாவை?

(04 புள்ளிகள்)

4) அங்கீகார வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது அங்கீகாரம் வழங்குபவர், அங்கீகாரம் பெறுபவர்களிடையே ஏற்படுகின்ற ஒப்பந்தமானது அங்கீகார ஒப்பந்தம் (Franchises Agreement) எனப்படும்.

அ) அங்கீகார ஒப்பந்தத்திற்கு அமைய அங்கீகாரம் வழங்குபவர் அங்கீகாரம் பெறுபவருக்கு வழங்கும் நான்கு வசதிகளைத் தருக.

ஆ) அங்கீகார ஒப்பந்தத்திற்கேற்ப அங்கீகாரம் பெறுபவர் நிறைவேற்ற வேண்டிய கருமங்கள் நான்கினை எழுதுக.

(04 புள்ளிகள்)

5) அ) ஒரு கிடை இணைப்புக்கும் நிலைக்குத்து இணைப்புக்கும் இடையிலான பிரதான வேறுபாடு யாது?

ஆ) அரசாங்கமானது வணிகக்கருமங்களில் ஈடுபடுவதற்கான நான்கு காரணங்களைத் தருக?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03.

1) அ) "தற்போதைய உலகளாவிய வணிகச்சூழலில் முயற்சியாண்மையின் முக்கியத்துவம் மிகத்தீவிரமடைந்துள்ளது" இக்கருத்தை விளக்குக.

ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை ஆரம்பிக்கும் போதும் அதனை நடத்திச் செல்லும் போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) லக்ஸ்மன் ரூபா 50000 பெறுமதியான இயந்திரம் ஒன்றை சந்திரபாலாவிற்கு விற்பனை செய்தார். சந்திரபாலா ரூபா 10000 இனை உடன் செலுத்தி மீதியை ஒரு வருடத்தில் செலுத்துவதாக உடன்பட்டார். லக்ஸ்மன் எல்லாப்பணத்தையும் பெற்ற பின்னர் புதிய இயந்திரம் கொள்வனவு செய்ய கிடைத்த ரூபா 10000 இனை வங்கியில் வைப்பிலிட்டார். வருட முடிவில் சந்திரபாலாவிடமிருந்து ரூபா 40000 பெறப்பட்டது.
இந்நிகழ்விற்கேற்ப பணத்தின் கருமங்களையும் அக்கருமங்களுக்கான உதாரணங்களையும் சரியான ஒழுங்கு முறையில் விபரிக்குக.

(04 புள்ளிகள்)

3) அ) முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளுடன் கூடிய மிகபாதுகாப்பான காசோலை ஒன்றைத் தயாரிக்கக்கூடிய வழிகளைக்குறிப்பிடுக. இப்பாதுகாப்பை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பதை விளக்குக.

ஆ) "இலத்திரனியல் பணத்தை பயன்படுத்துவதனூடாக வாடிக்கையாளர்களுக்கு அனுகூலங்களும் பிரதிகூலங்களும் கிடைக்கப்பெறும்" வாடிக்கையாளர்களுக்கு அனுகூலமாகவும், பிரதி கூலமாகவும் அமையும் விதங்கள் இரண்டு வீதம் தனித்தனியாக குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4) அ) ஆயுள் காப்புறுதிக்கும் ஏனைய காப்புறுதிக்கும் இடையிலான நான்கு வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.

agaram.lk

ஆ) மறுகாப்புறுதி செய்தல் மூலம் காப்புறுதிக்கம்பனிக்கும் காப்புறுதி செய்பவருக்கும் முறையே கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

5) அ) ஒரு நாட்டின் சமூக நடவடிக்கைகளுக்கான தொடர்பாடலின் முக்கியத்துவத்தை விளக்குக.

ஆ) இலங்கையில் பெருந்தெருப்போக்குவரத்து பிரபல்யம் அடைந்து காணப்படுவதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04.

1) போக்குவரத்தினதும் வழங்கல் சேவையினதும் அனுகூலங்கள் நான்கை விளக்குக.

2) நீங்கள் பெரிய அளவு எண்ணிக்கையிலான நுகர்வுப்பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளவராக உங்களைக் கருதிக்கொள்க.

அ) ஒரு உற்பத்தியாளன் தனது உற்பத்திகளை நுகர்வோருக்கு விநியோகிக்கக்கூடிய வழிமுறைகளைக் குறிப்பிடுக.

ஆ) நீங்கள் உங்கள் பொருட்களை பொறுப்பு முகவர் ஊடாக விற்பனை செய்வதற்கும், அவருக்கு பொறுப்புத்தரகுப்பணமும் வழங்குவதற்கும் எண்ணுகிறீர்கள் பொறுப்புத்தரகுப்பணம் வழங்குவதில் காணப்படும் உள்ளார்ந்த உந்து சக்தி யாது?

(04 புள்ளிகள்)

3) மொத்த வியாபாரம் என்றால் என்ன என்பதனை வரையறுத்து, மொத்த வியாபாரியினால் உற்பத்தியாளருக்கு சில்லறை வியாபாரிக்கு பொதுமக்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற சேவைகள் இரண்டு வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4) அ) சுதந்திர வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சுங்கவரி அற்ற தடைகள் நான்கு தருக.

ஆ) வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்பட்டுள்ள நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

5) வெளிநாட்டு வியாபாரத்தின் போது பின்வரும் ஆவணங்கள் ஒவ்வொன்றும் எந்நோக்கத்திற்காக உபயோகப்படுகின்றனவெனச் சுருக்கமாக விளக்குக.

1. நாணயக்கடிதம்
2. உற்பத்தி நாட்டுச்சான்றிதழ்
3. நாட்ட ஈட்டுக்கடிதம்
4. கப்பல் தளச்சீட்டு

(04 புள்ளிகள்)

மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

05.

1) அ) நடைமுறையில் முகாமைத்துவம் முன்னரைவிட நிறுவனமொன்றுக்கு முக்கியத்துவமுடைய ஒன்றாக மாறியுள்ளமைக்கான நான்கு காரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

ஆ) ஹென்றி மின்ற்ஸ் பேர்க் (Henry Mitzberg) என்பவர் பின்வரும் தலைப்புக்களின் கீழ் குறிப்பிடும் முகாமையாளரொருவரின் உபவகிபாகங்களை எடுத்துக்காட்டுக.

1. ஆளிடைவகிபாகம் (Interpersonal Role)
2. தகவல் வகிபாகம் (Informational Role)

(04 புள்ளிகள்)

2) நிறுவனமொன்றில் பெரும்பாலான தீர்மானங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே எடுக்கப்படும் தீர்மானங்கள் வெற்றியடைவதற்கு தீர்மானமெடுக்கும் செயன்முறையின் போது பின்பற்ற வேண்டிய படிமுறைகளை ஒழுங்கு முறையில் விளக்குக.

(04 புள்ளிகள்)

3) அ) மையப்படுத்தல் (Centralization) பன்முகப்படுத்தல் எனப்படுபவை யாவை?

ஆ) மையப்படுத்தல், பன்முகப்படுத்தல் ஆகியவை ஒவ்வொன்று தொடர்பாகவும் இரு அனுகூலங்களைத் தனித்தனியே எடுத்துக் கூறுக.

(04 புள்ளிகள்)

4) அ) தொழிற்சாலைத்தள அமைப்புத்திட்டம் ஏன் தேவையானதாகும் என்பதனை விளக்குக.

ஆ) சமப்பாட்டுப் புள்ளியை கணிப்பதில் பயன்படுத்தப்படும் கிரயங்களின் இரு பிரதான வகைகளைக்குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணங்கள் தருக.

(04 புள்ளிகள்)



agaram.lk

5) "உற்பத்தி நிறுவனமொன்று அதன் உற்பத்திச் செயன்முறைக்கு Jit முறை (Justin Time) பயன்படுத்துகின்றது" Jit முறை என்றால் என்ன என்பதை விளக்கி அம்முறையின் அனுகூலங்கள் பிரதி கூலங்கள் மூன்று வீதம் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06.

1) அ) இரட்டைக் கொள்கலன் முறை (Two Bin System) சரக்கிருப்புக்கட்டுப்பாட்டு முறையினைச் சுருக்கமாக விளக்குக.

ஆ) இழிவு இருப்பு மட்டத்தை விடக்களஞ்சிய சாலையின் இருப்பு கீழ் நிலைக்குச் செல்லுமாயின் ஒரு வணிகர் எதிர்நோக்கும் நான்கு பிரதிகூலங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

2) அ) "உற்பத்தி நிறுவனமொன்றிற்கான தரக்கட்டுப்பாட்டு செய்முறை என்பது முடிவுப் பொருட்களைப் பரிசோதிப்பது மட்டுமே ஆகும்" மேற்கூறிய கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

ஆ) பொருளின் தரம் சில கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கும். அக்கூறுகளில் நான்கு குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

3) பெரும்பாலான நிறுவனங்கள் தமது உற்பத்தித்திறனை மேம்படுத்த நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் நான்கு அனுகூலங்களையும் நான்கு பிரச்சினைகளையும் தருக.

(4 புள்ளிக்ள)

4) அ) நுகர்வோர் சந்தைத்துண்டமாக்கலுக்குப் பயன்படுத்தப்படும் அடிப்படைகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

ஆ) விளைதிறன் கொண்ட சந்தைத்துண்டமாக்கலுக்கான நான்கு தேவைப்பாடுகளை எழுதுக.

(4 புள்ளிகள்)

5) "அனைத்து வணிக நிறுவனத்துக்கும் சந்தையில் நிலைத்திருத்தல் கடினமானதாகும்" சந்தையில் நிலைத்திருத்தல் என்றால் என்ன என்பதை விளக்கி அவ்வாறு நிலைத்திருக்கக்கூடி முறைகள் யாவை என்பதைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

07.

1) வணிகரின் பார்வையில் சந்தைப்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் பிரிவுகளைக் குறிப்பிட்டு வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்கு அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.

(4 புள்ளிகள்)

2) அ) பொருத்தமான பண்டப்பெயரொன்றை (Brand Name) உருவாக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?

ஆ) பொதியிடலொன்றைத்திட்டமிடும் பொழுது கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் நான்கினை எழுதுக.

(4 புள்ளிகள்)

3) நுகர்வுப் பொருள்களை வகைப்படுத்தி விளக்குக.

(4 புள்ளிகள்)

agaram.lk

4) ஆ) வணிகமொன்றின் நிதித்தேவையினை இருவகைகளாக வகைப்படுத்திக் காட்டமுடியும்.
1. குறுங்கால நிதித்தேவை
2. நீண்ட கால நிதித்தேவை
இந்த இரண்டு வகையான நிதித்தேவைகளையும தனித்தனியாக உதாரணங்களுடன் விளக்குக.

ஆ) ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நான்கு உள்ளக நிதியீட்டல் வழிமுறைகளையும் நான்கு வெளியக நிதியீட்டல் வழிமுறைகளையும் பெயரிடுக.
(04 புள்ளிகள்)

5) அ) நிறுவனமொன்று நிதித்தேவையினை நிறைவு செய்து கொள்ளும் போது கருத்திற்கொள்ள வேண்டிய நான்கு அடிப்படைக் காரணிகளை எழுதுக.

ஆ) விமல் தனது வணிகத்தின் மேலதிக மூலதனத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிதியீட்டல் வழிமுறைகளில் உள்ளக ரீதியிலான நிதியீட்டல் வழிமுறைகளைத் தீர்மானித்தால், அவருடைய தீர்மானத்தின் நான்கு அனுகூலங்களைத் தருக.
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

08.

1) அ) காசுப்பாதீட்டு அட்டவணை (Cash Budget) என்பதாற் கருதப்படுவது யாது?

ஆ) ஒரு வணிகத்தை முகாமை செய்வதற்கு காசுப்பாதீட்டு அட்டவணை ஏன் தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குக.
(04 புள்ளிகள்)

2) அ) பணச்சந்தையின் துணைச்சந்தைகள் நான்கு குறிப்பிடுக.

ஆ) பின்வருவன பங்குப்பரிமாற்றத்தில் வரையறுத்த பொதுக்கம்பனிகளுக்கு பதிவு செய்யக்கூடிய இரண்டு முறைகளாகும்.
1. ஆரம்ப பொது வழங்கல் (Initiat Public offer)
2. விற்பனைக்கான கொடை முனைவு (Offer for sale)
மேற்கூறப்பட்ட இரண்டு முறைகளையும் தனித்தனியாக விளக்குக.
(04 ள்ளிகள்)

3) நிதி பௌதிக வளங்களுடன் ஒப்பிடும் போது மனிதவளத்தின் தனிப்பட்ட சிறப்பியல்புகள் யாவை?
(04 ள்ளிகள்)

4) அ) மனித வளத்திட்டமிடல் செயல் முறையின் படிமுறைகளை ஒழுங்கு முறையில் விளக்குக.

ஆ) ஒரு முகாமை அடுத்துவரும் ஆண்டிற்கான தமது மனித வளத்தேவையை எதிர்வு கூறும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

5) அ) உள்ளக ரீதியான ஈர்ப்பு முறைகளுக்குப் பயன்படுத்தப்படும் முறைகள் எவை?

ஆ) உள்ளக ஊழியர் ஈர்ப்பின் மூலம் உள்ள அனுகூலங்கள் இரண்டு பிரதி கூலங்கள் இரண்டு குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk